செய்தி வெளியீடு எண்: 468 நாள்: 18.07.2018

<u>செய்தி வெளியீடு</u>

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் முட்டை கொள்முதல் குறித்து விளக்கம்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்துள்ள 1 வயது முதல் 2 வயதுடைய குழந்தைகளுக்கு வாரம் ஒரு முட்டையும் அங்கன்வாடி மையங்களுக்கு வருகை தரும் 2 வயது முதல் 5 வரையுள்ள குழந்தைகளுக்கு வாரம் மூன்று முட்டைகளும் மற்றும் பள்ளி செல்லும் 1 ஆம் முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு வாரம் 5 முட்டைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

43,205 சத்துணவு மையங்களின் மூலம் 40.36 இலட்சம் மாணவ மாணவியர்களுக்கும், 54,439 அங்கன்வாடி மையங்கள் மூலம் 13.55 இலட்சம் குழந்தைகளும் ஆக மொத்தம் நாளொன்றுக்கு 97,644 அங்கன்வாடி / சத்துணவு மையங்கள் மூலம் 53.91 இலட்சம் பயனாளிகள் திட்டத்தின் கீழ் பயன்பெற்று வருகின்றனர்.

சத்துணவு திட்டத்தில் முட்டை முதல்முதலாக 26.05.1989ல் அறிமுகம் செய்யப்பட்டு அரசாணை (நிலை) எண்.81 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, நாள்.08.05.1998ன்படி முதன்முதலில் மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி கோரும் நடைமுறை கொண்டுவரப்பட்டது. அரசாணை (நிலை) எண்.181 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, நாள்.29.11.2006 மற்றும் அரசாணை (நிலை) எண்.60 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, நாள்.24.04.2007ன்படி மாவட்ட அளவில் முட்டை

கொள்முதல் ஒப்பந்தப்புள்ளி கோரும் நடைமுறை செயல்படுத்தப்பட்டது. மாவட்ட அளவிலான கொள்முதல் முறையில் பல்வேறு குளறுபடிகள் காணப்பட்டதாலும் செலவு குறித்து மத்திய கணக்காயர் துறையின் மாநில முதன்மை கணக்காயர் அவர்களால் தணிக்கை தடை எழுப்பப்பட்டதாலும் முட்டை கொள்முதல் அரசாணை (நிலை) எண்.264 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, நாள்.17.10.2012ன்படி மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி கோரும் முறை மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டது.

- மேற்கண்ட அரசாணையை ரத்து செய்யக்கோரி சில கோழிப் பண்ணையாளர்களால் உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்கள். 6896 / 2013 மற்றும் 7586 / 2013 ஆகிய வழக்குகள் தொடுக்கப்பட்டன.

- இவ்வழக்குகளை விசாரித்த உயர்நீதிமன்றம் தனது 21.03.2013 மற்றும் 27.03.2013 நாளிட்ட தீர்ப்பில் மனுதாரர்களின் கோரிக்கையில் எவ்வித தகுதியும் இல்லை (Devoid of Merits) என்று கூறி மனுக்களை தள்ளுபடி செய்தது.

- மேலும், மேல்முறையீட்டு வழக்கு எண்கள். 574, 776 / 2013 மற்றும் 13320 / 2013 ஆகிய வழக்குகளின் மீது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் தனது 25.4.2014 நாளிட்ட தீர்ப்பின்படி அனைத்து வழக்குகளையும் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்தது.

- மேற்காணும் சென்னை உயர்நீதிமன்ற 25.4.2014 நாளிட்ட தீர்ப்பினை எதிர்த்து, மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண். CC No. (S). 6375 / 2015 தொடரப்பட்டது. இவ்வழக்கினை விசாரணை செய்த மாண்புமிகு உச்சநீதிமன்றம், 13.4.2015 அன்று இவ்வழக்கை தள்ளுபடி செய்து **(Case Dismissed)** தீர்ப்பு வழங்கியது.

முட்டை கொள்முதல் செய்வதற்கு மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளிகள் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** மற்றும் விதிகள் **2000** விதிமுறைகளின்படி குறைந்த விலைப்புள்ளி அளிக்கும் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த முட்டையின் விலை தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு விலையுடன் ஒப்பிட்டு, அவ்விலையுடன் முட்டைகளை பண்ணையிலிருந்து எடுத்துச் செல்வதற்கு உண்டான செலவினம், முட்டை அடுக்கும் தட்டுகளுக்கு உண்டான செலவினம், முட்டைகளை தரம் பிரித்தலுக்கு உண்டாகும் செலவினம், முட்டைகளின் மேல் குறியீடு செய்வதற்கு உண்டான செலவினம் மற்றும் முட்டைகளை அனைத்து சத்துணவு மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கே நேரடியாக விநியோகிக்க ஏற்படும் போக்குவரத்து செலவினம் என அனைத்து செலவினங்களையும் உள்ளடக்கியதாகும்.

**2017 – 2018** ஆம் ஆண்டில் கொள்முதல் செய்யப்படும் முட்டை **45** கிராமிற்கு குறைவில்லாமல் அக்மார்க் அமைப்பால் நிர்ணயம் செய்யப்பட்ட A – Medium ரக முட்டை ஒன்றின் விலை ரூ.**4.34** என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதேபோன்ற மதிய உணவு திட்டத்திற்கு ஜார்கண்ட் மாநிலத்தில் இந்த ஆண்டில் ஒரு முட்டையின் விலை ரூ.**5.93** ஆகவும், ஆந்திர பிரதேசத்தில் ஒரு முட்டையின் விலை ரூ.**4.68** ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு **2013 – 2014** ஆம் ஆண்டில் ரூ.**316.46** கோடியும், **2014 – 2015** ஆம் ஆண்டில் ரூ. **458.99** கோடியும், **2015 – 2016** ஆம் ஆண்டில் ரூ.**432.13** கோடியும், **2016 – 2017** ஆம் ஆண்டில் ரூ.**420.56** கோடியும், **2017 – 2018** ஆம் ஆண்டில் ரூ.**403.08** கோடியும் ஆக மொத்தம் கடந்த **5** ஆண்டுகளில் மொத்தம் ரூ.**2031.22** கோடி இத்திட்டத்திற்காக செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 விதிமுறைகளின்படி முறையாகவும் குறைந்த செலவில் இலட்சக்கணக்கான குழந்தைகள் மற்றும் பள்ளி மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வண்ணம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. சத்துணவில் முட்டைகள் வழங்கும் திட்டம் குறித்து சமீபத்தில் சில நாளிதழ்கள் மற்றும் ஊடகங்களில் வெளியான செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**